முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 13.02.2026 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 57 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிகவரி அலுவலகக் கட்டடங்கள், 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் திருப்பூர் பதிவு மாவட்டத்தில் பொங்கலூர், தாம்பரம் பதிவு மாவட்டத்தில் வண்டலூர், கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டத்தில் வாணாபுரம் ஆகிய புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.மூர்த்தி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும்,கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்று சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

16.02.2026 திங்கள்கிழமை

காலை 09.30 மணி	நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா	புதுக்கோட்டை.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 13.02.2026

கலைஞர் 100 1924 - 2023

ஆதி திராவிடர் – பழங்குடியினர் நலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி

‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டத்தில் ரூ.5,000 வழங்குவதற்காக மாற்றிப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது!

அரசு விளக்கம்!

சென்னை, பிப்.16-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் ரூ.5 ஆயிரம் வழங்குவதற்காக மாற்றிப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது, ஆதாரமற்றது என அரசு விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பான அரசு செய்தி வெளியீடு வருமாறு:-

சில ஊடகங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை (KMUT) திட்டத்தின் கீழ் ரூ.5,000 வழங்குவதற்காக மாற்றி பயன்படுத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டு முற்றிலும் தவறானதும் ஆதாரமற்றதும் ஆகும் என்பதை அரசு தெளிவுபடுத்துகிறது.

முதலில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட எந்த நிதியும் வேறு திட்டங்களுக்கு மாற்றி பயன்படுத்தப்படவில்லை. அரசின் வரவுசெலவுத் திட்ட முறையின் படி, ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒதுக்கப்படும் மொத்த நிதிக்குள் “பொது”, “ஆதி திராவிடர்”, “பழங்குடியினர்” என தனித்தனி கணக்கு தலைப்புகள் குறிப்பிடப்படுகின்றன.

இந்த நடைமுறை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் உட்பட தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நலத் திட்டம் போன்ற அனைத்து தனிநபர் பயனாளி சார்ந்த திட்டங்களிலும் பின்பற்றப்படுகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் நிதி, அந்த சமூக பயனாளிகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அந்த நிதியை வேறு சமூகங்களுக்கோ அல்லது வேறு நோக்கங்களுக்கோ பயன்படுத்த முடியாது. இது அரசின் நிலையான நிதி ஒழுங்குமுறையின் ஒரு பகுதியாகும்.

இவ்வாறு, KMUT திட்டத்திற்கும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு தனி தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, KMUT திட்டத்தின் கீழ் ரூ.5,000 வழங்குவதற்கான கூடுதல் செலவு, இத்திட்டத்திற்கான தனி கூடுதல் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கனவே உள்ள ஆதி திராவிடர் பழங்குடியினர் திட்டங்களுக்கான நிதியில் இருந்து எடுக்கப்படவில்லை. எனவே, நிதி மாற்றம் (Diversion) நடந்ததாக கூறுவது முற்றிலும் தவறானது.

மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நிதியை பாதுகாக்க அரசு தனிப்பட்ட சட்டத்தை இயற்றியுள்ளது. அந்தச் சட்டத்தின் படி, இந்த சமூகங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி அவர்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஒரு நிதியாண்டில் பயன்படுத்தப்படாத தொகை இருந்தாலும், அது பொதுநிதியாக மாறாது. அடுத்த நிதியாண்டில் அதே நோக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்ற சட்டப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நிதி மாற்றி பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு முழுமையாக ஆதாரமற்றது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்கு அரசு உறுதியாக செயல்பட்டு வருகிறது. சட்ட விதிமுறைகளையும் நிதி ஒழுங்கையும் கடைப்பிடித்து, உரிய நிதி உரிய பயனாளிகளுக்கே சென்றடைவதை அரசு தொடர்ந்து உறுதி செய்து வருகிறது. எனவே, எந்த ஒரு திட்டத்துக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயனாளிகளுக்கான தனித் தலைப்பில் ஒதுக்கப்படும் நிதியை ஏற்கனவே உள்ள நலத்திட்டங்களில் இருந்து மாற்றி தருவதாக கூறுவது முற்றிலும் தவறானதாகும்.

இவ்வாறு அரசின் செய்தி வெளியீட்டில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

அன்னியூரில் கழக அலுவலகம் அன்பகம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்தார்!

விழுப்புரம், பிப். 15-

விழுப்புரம் அருகே அன்னியூரில் கட்டப்பட்ட அன்பகத்தை, நேற்று முன்தினம் காணொலி காட்சி வாயிலாக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து அன்னியூரில் நடைபெற்ற விழாவுக்கு தி.மு.க. துணை பொதுச்செயலாளரான க.பொன்முடி எம்.எல்.ஏ. தலைமை வகித்து, ரிப்பன் வெட்டி கட்சியினர் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். இந்த வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள புகைப்படங்களையும், கட்டிடத்தின் மேல்தளத்தில் நிறுவப்பட்ட நூலகத்தையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து விழாவில் அவர் பேசியதாவது:

ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்சிக்கு கட்டிடம் வேண்டும் என முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தினார். அதன் அடிப்படையில் விழுப்புரத்தில் கலைஞர் அறிவாலயக் கட்டிடம் கட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட அன்னியூரில் அன்பகம் கட்டிடம் கட்டப்பட்டு, முதல்வரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதுஅன்னியூருக்கு கிடைத்த பெருமையாகும். இதுபோல மாவட்டத்தின் மற்ற ஒன்றியங்களிலும் கட்டிடம்உருவாகவேண்டும்.

மகளிருக்கு உரிமையே வழங்கப்படாமல் இருந்தது ஒரு காலம். இன்று மகளிர் நலன் காக்கும் வகையில், அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தவர்களாக இருக்கும் வகையில் மாதம் ரூ.1,000 கலைஞர் உரிமைத் தொகை, நகரப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000 உதவித் தொகை போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியவர் முதல்வர் ஸ்டாலின் அவர்கள். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் பயனாளிகளுக்கு இன்று காலையிலேயே அவர்களது வங்கிக் கணக்கில் ரூ.5 ஆயிரம் வரவு வைத்து, அவர்களுக்கு இன்ப அதிர்ச்சியை அளித்துள்ளார் முதல்வர் ஸ்டாலின் அவர்கள். 2026 பேரவைத் தேர்தலில் மட்டுமல்ல, எப்போதும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் மு.க. ஸ்டாலின் தான் என்றார்.

இவ்விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி, விக்கிரவாண்டி எம்எல்ஏ வும், திமுக விவசாயத் தொழிலாளர் அணியின் மாநிலச்செயலருமான அன்னியூர் அ.சிவா, மாவட்ட அவைத்தலைவர் ம.ஜெயச்சந்திரன், துணைச் செயலாளர்கள் டி.என். முருகன், இரா.கற்பகம், ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.ராஜா, ஆர். முருகன், வேம்பி ரவி, ஜெய.ரவிதுரை, க.மும்மூர்த்தி, ஜெ.ஜெயபால், வே.கில்பர்ட் ராஜ், மு.தங்கம், ஜி.ரவிச்சந்திரன், பி.வி. ஆர். சு.விசுவநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.5,000

முதல்வரின் திராவிட மாடல் நல்லாட்சிக்கு மேலும் ஒரு மகுடம்!

பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன் பெருமிதம்!

திருச்சி, பிப் 16 -

திராவிட மாடல் நல்லாட்சிக்கு மேலும் ஒரு மகுடம் இணைத்தது போலாகும். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மற்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தொலைநோக்கு பார்வைக்கு வரவேற்பு அளிப்பதாக இருக்கிறது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் 13.02.2026 வெள்ளிக் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:

தங்கத் தமிழகத்தில் பொங்கு புகழ் சேர்த்து வரும் திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் மேலான பொன்னான ஆட்சி காலமெல்லாம் தொடர்ந்து நீடிக்க இறையருள் துணை செய்யுமாக.

திராவிட மாடல் 2.0வில் கலைஞர் உரிமைத் தொகையை ரூ.2,000ஆக உயர்த்துவோம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்துள்ளார். 1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கும் வெள்ளிக்கிழமை காலை ரூபாய் 5000 வரவு வைக்கப்பட்டிருக்கிறது. 3 மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3,000ம் கோடைக்கால சிறப்பு தொகுப்பாக ரூ.2,000 ஆகவும் வரவு வைப்பு. தேர்தலைக் காரணம் காட்டி 3 மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்கப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த மு. க. ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத் தொகை என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடைய செய்தியாகும்.

தமிழ்நாட்டில் குடும்பத் தலைவிகள் எதிர் கொண்டு வரும் சமூக, பொருளாதார நிலைகளை கருத்தில் கொண்டு, கடந்த 2021 மே மாதத்தில் இருந்து விடியல் பயணம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதனால் தமிழ்நாடு முழுவதும் நகரப் பேருந்துகளில் உழைக்கும் பெண்கள் தினசரி 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணம் செய்து, சராசரியாக மாதம் ரூ.1000 யையும் பயன்டைந்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 2023 செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000யை வழங்கும் கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் எதிர் நோக்கியுள்ள நிலையில், தேர்தல் நடத்தை விதிகளால் மகளிர் உதவித் தொகை செலுத்தும் நடவடிக்கை பாதிக்கப்பட்டு, அதனால் குடும்பத் தலைவிகள் சிரமங்களை சந்திக்கக் கூடாது என்ற பொறுப்புணர்வோடும், கோடைக் காலத்தில் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை நாட்கள் என்பதாலும், குடும்பச் செலவுகள் கூடும் என்பதையும் கருத்தில் கொண்டு சிறப்பு நிதியாக ரூ.2000 யையும் சேர்த்து, குடும்பங்களுக்கு தலா ரூ.5000 வீதம் வங்கியில் முன் கூட்டியே செலுத்தி விட்டு, அந்த இனிய தகவலை காணொளி வழியாக அறிவித்திருப்பது அனைவரது உள்ளங்களிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. முதல்வர் அவர்களின் சமூக நீதி பார்வையும், பாலின சமத்துவம் நோக்கிய நடவடிக்கைகளையும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் மகிழ்வுடன் வரவேற்கிறது.

திராவிட மாடல் நல்லாட்சிக்கு மேலும் ஒரு மகுடம் இணைத்தது போலாகும் என்பதை அன்புடன் தெரிவித்து கொள்கிறோம் இவ்வாறு பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வங்கி கணக்கில் ரூ.5000 வரவு!

மகளிர் மனம் குளிரச் செய்யும் மகத்தான செயல்!

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பாராட்டு!

சென்னை, பிப். 16-

‘மகளிருக்கு ரூ.5000 வரவு, எதிர்காலத்தில் உரிமைத் தொகையை ரூ.2000ஆக உயர்த்தும் முதலமைச்சரின் அறிவிப்பை வரவேற்கிறோம். இது மகளிரை மனம் குளிரச் செய்யும் அறிவிப்பு மட்டுமல்ல, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அறிவிப்பாகும்’ என விசிக தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; “மகளிர் உரிமைத்தொகை பெறும் பெண்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசால் இன்று அவர்களது வங்கிக் கணக்கில் ஐந்தாயிரம் ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. பிப்ரவரி மார்ச் ஏப்ரல் மாதங்களுக்கான தொகை 3000, கோடைக்கால இடர்பாடுகளை எதிர்கொள்வதற்கு உதவித்தொகை 2000 என ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இது மகளிரை மனம் குளிரச் செய்யும் மகத்தான அறிவிப்பாகும். இதைச் செயல்படுத்திய முதலமைச்சருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெண்களிடம் பணத்தைக் கொடுத்தால் அதை அவர்கள் ஆக்கபூர்வமான வழிகளில் தான் செலவு செய்வார்கள். அது பண சுழற்சியை ஏற்படுத்தி பொருளாதார மேம்பாட்டுக்கு வழி வகுக்கும். மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் தமிழ்நாட்டில் அதைத்தான் செய்திருக்கிறது. அடுத்து அமையப் போகிற திமுக ஆட்சியில் மகளிர் உரிமைத் தொகை மாதம் 2000 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும்’ என்றும் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். இது யாரும் எதிர்பாராத ஒரு அறிவிப்பாகும்.

திமுக அரசின் நலத்திட்டங்களால் பயன்பெற்று வரும் பெண்கள் மீண்டும் திமுகவைத்தான் ஆட்சியில் அமத்துவோம்! என்று உறுதி எடுத்து இருக்கிறார்கள். இந்த அறிவிப்பு அவர்களுக்கெல்லாம் ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. 2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இந்தியாவில் இருக்கும் ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் செலுத்துவோம் என்று திரு நரேந்திர மோடி வாக்குறுதி அளித்தார். அது பொய்யான வாக்குறுதி என்பது அம்பலமானது. 15 லட்சம் அல்ல 15 ரூபாயைக் கூட அவர்கள் கொடுக்கவில்லை.

மோடியைப் போல வாயால் வடை சுடுபவரல்ல நமது முதலமைச்சர் மிகச் சிறப்பாக மகளிர் உரிமைத் திட்டத்தை அவர் செயல்படுத்திக் காட்டியுள்ளார். எனவே, அடுத்துவரும் திமுக ஆட்சியில் 2000 ரூபாயும் உறுதியாக வழங்கப்படும் என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். 2021இல் தான் அளிற்ற வாக்குறுதிகளை மட்டுமின்றி அளிக்காத வாக்குறுதிகளையும் நிறைவேற்றிக் காட்டியவர் நமது முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்படவில்லை. ஆனால், அந்தத் திட்டத்தையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மக்கள் நல அரசாக சமூக நீதி அரசாக, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில், கல்வி வளர்ச்சியில், சுகாதாரக் கட்டமைப்பில் முதல் மாநிலம் என்ற பெருமைகொண்ட அரசாகத் தமிழ்நாடு அரசைத் தலைநிமிரச் செய்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர். அவருடைய சாதனை தொடர்வதற்கு தமிழ்நாட்டு மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மீண்டும் அவரது தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் அமைய ஆதரவு தரவேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு

பிப்ரவரி 16 (1978)



கழகம் தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர், கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், வெளியீட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

1953களில் தீப்பொறி என்ற ஏட்டை சொந்தமாக நடத்தினார். 1959களில் இனமுழக்கம் என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார்.

சிந்தனையை கிளறிவிடும் பேச்சாளர். நாடகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் சி.பி.சிற்றரசு அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கச் செய்தார்.

1989ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு “சிந்தனைசிற்பி சிற்றரசு” பெயரை தலைவர் கலைஞர் சூட்டினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.